பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
*16 04 2026 THURSDAY 12 40 PM*
ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. மகளிர் மேம்பாட்டிற்கு வகை செய்யும் வரலாற்றுச் சிறப்புமிக்க நாடாளுமன்றத்தின் 3 நாள் சிறப்பு அமர்வு இன்று தொடங்கியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தொகுதி மறுவரையறை காரணமாக எந்தவொரு மாநிலமும் பாதிக்கப்படாது என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

3. ஆந்திராவில் நேரிட்ட சாலை விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

4. அணு செறிவூட்டும் உரிமையில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஈரான் கூறியுள்ளது.

5. *Hamburg* ஒப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் *Veer Chotrani* மற்றும் ஜோஷ்னா சின்னப்பா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 3 நாள் சிறப்பு அமர்வு இன்று தொடங்கியது.

மக்களவையில் சட்ட அமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மெஹ்வால், அரசியல் சாசன சட்டத்திருத்த மசோதாவையும், தொகுதி மறுவரையறை மசோதாவையும் தாக்கல் செய்தார்.

இதேபோல், உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, யூனியன் பிரதேச சட்டத்திருத்த மசோதாவை தாக்கல் செய்தார்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே.சி. வேணுகோபால், இந்த மசோதாக்களுக்கு அறிமுக நிலையிலேயே எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்த மசோதாவை அமல்படுத்துவதற்கு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதனையடுத்து, மசோதாவை அறிமுகப்படுத்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்த மசோதாவிற்கு ஆதரவாக *207* பேரும், எதிராக *126* பேரும் வாக்களித்தனர்.

இதன் பின்னர் இந்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பேசிய மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, இந்த மசோதா மீதான விவாதம் *15* முதல் *18* மணி நேரம் வரை நடைபெறும் என்றார்.

இதன்மீதான வாக்கெடுப்பு நாளை மாலை *4* மணிக்கு நடைபெறும் என்றும் திரு. ஓம் பிர்லா அறிவித்தார்.

முன்னதாக பேசிய திரு. அமித் ஷா, இந்த மசோதாக்கள் குறித்து விவாதிக்க உறுப்பினர்களுக்கு போதிய அவகாசம் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த மசோதாக்கள் குறித்து எழுப்பப்படும் கேள்விகள் அனைத்திற்கும் மத்திய அரசு உரிய பதில் அளிக்கும் என்றும் திரு. அமித் ஷா கூறினார்.

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மகளிர் மேம்பாட்டிற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வு இன்று தொடங்குவதாக சமூகவலைதளத்தில் தெரிவித்திருந்தார்.

சமஸ்கிருத ஸ்லோகத்தை பதிவிட்டு இக்கருத்தை தெரிவித்துள்ள அவர். மகளிருக்கு செலுத்தும் மரியாதை, நாட்டிற்கு செலுத்தும் மரியாதைக்கு இணையானது என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையே, தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், இன்று நாமக்கல்லில் கறுப்புக் கொடியேற்றி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

அம்மசோதாவின் சட்ட நகலையும் அவர் தீயிட்டு கொளுத்தினார்.

திமுக அழைப்பு விடுத்திருந்த இந்த கறுப்புக் கொடியேற்றும் போராட்டத்திற்கு பொதுமக்களின் ஆதரவு கிடைக்கவில்லை என்று எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே, இப்பிரச்சினையை திரு. மு.க. ஸ்டாலின் அரசியலாக்குவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதை முறியடிப்பதற்கான காரணத்தை திமுக தேடுவதாக குறை கூறினார்.

திமுகவின் இந்த செயல்பாடுகள் துரதிருஷ்டவசமானது என்றும் அவர் தெரிவித்தார்.

தொகுதி மறுவரையறை காரணமாக தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என்று அமைச்சர் திட்டவட்டமாக கூறினார்.

இப்பிரச்சினை குறித்து தவறான தகவல்களை யாரும் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டாம் என்றும் திரு. கிரண் ரிஜிஜு வேண்டுகோள் விடுத்தார்.

மக்களவையிலும், சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை, 2029ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலிலேயே வழங்க வேண்டும் என்ற நோக்கில், பிரதமர் திரு. நரேந்திர மோடி வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மசோதாக்கள் ஒருமனதாக நிறைவேற அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதை திமுக தடுப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தொகுதி மறுவரையறையால் தமிழகத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் இதனை ஏற்க மறுத்து, திமுகவினர் போராட்டம் நடத்துவதாக திரு. எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

>>>>><<<<<

ஆந்திராவில் இன்று அதிகாலை நேரிட்ட சாலை விபத்தில் *8* பேர் உயிரிழந்தனர்.

கர்நாடகாவிலிருந்து மந்திராலயம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேன், *Kurnool* மாவட்டத்திற்கு உட்பட்ட *Chilakaladona* அருகே லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் *10* பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா *2* லட்சம் ரூபாய் நிதியுதவியையும் பிரதமர் அறிவித்துள்ளார்.

*>>>>><<<<<*

தெலங்கானாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப எழுத்தறிவு இயக்கத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

அரசு பள்ளிகளில் பயிலும் *20* லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் ஒரு பகுதியாக மாணவர்களுக்கு *2* ஆயிரம் மடிக்கணினிகள் இன்று வழங்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*>>>>><<<<<*

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - *15* செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது சிவகங்கை மாவட்டத்துக்கு உட்பட்ட தொகுதிகள்.

*(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 2 min 52 sec..)*

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் புகைப்படம் மற்றும் சின்னங்களை பொருத்தும் பணி இன்று தொடங்கியது.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இப்பணி நடைபெற்று வருவதாகவும், இன்று மாலைக்குள் இப்பணிகள் நிறைவடையும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

அணு செறிவூட்டும் உரிமையில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

டெஹ்ரானில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. *Esmaeil Baqaei* சர்வதேச நெறிமுறைகளுக்கு உட்பட்டு ஈரான் இப்பணிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

>>>>><<<<<

*Hamburg* ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் *Veer Chotrani* மற்றும் ஜோஷ்னா சின்னப்பா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் *Veer Chotrani 11-8, 11-9, 11-8* என்ற செட்கணக்கில், ஸ்பெயினின் *Ivan Perez*-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் ஜோஷ்னா சின்னப்பா, *11-4, 11-5, 11-4* என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் *Saskia Beinhard*-ஐ வென்றார்.

*>>>>>END<<<<<*